தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Inside the Inner Theory: Implied Meaning and 'Iraichi'

**M. Jayasankar*,**
[1]Ph.D. Research Scholar, Department of Tamil Studies, Annamalai University, Annamalainagar.
*Correspondence: jaisangar360@gmail.com, Tel: 8668063978.

**Article Info**
Received on 21-Mar-2026, Revised on 27-Mar-2026, Accepted on 27-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

Among the literatures of the world, Sangam Literature stands out as a magnificent testament to the culture and civilization of the Tamil people. These Sangam poems beautifully illustrate the codes of conduct (ozhukkam) associated with the five types of landscapes (Thinai).

As defined by Tolkappiyar in the context of "Anbin Ainthinai" (The five landscapes of love), the life of the Sangam people flourished through the framework of the three components:

- Muthalporul (Primary elements: Time and Space)
- Karuporul (Regional elements: Flora, fauna, deities, etc.)
- Uripporul (Human emotions and conduct)

The heroes and heroines depicted in these "Akam" (interior/love) poems lived their lives adhering to a refined civilizational conduct. A key element of this is Ullurai (implied metaphor) and Iraichi (suggestive meaning). Through the use of regional elements (Karuporul), the concept of Iraichi serves to subtly describe the behavior and conduct of the hero. This article explores the presence and significance of Iraichi within Sangam Akam literature.

***KEYWORDS:*** *Iraichi, Ullurai, Karuporul, Uripporul, Animal, Bird.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07042026.27

# அகக்கோட்பாட்டில் உள்ளுறையும் இறைச்சியும்

[1]**மா. ஜெயசங்கர்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்,

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் தோன்றிய இலக்கியங்களில் தமிழரின் பண்பாட்டையும் நாகரீகத்தையும் சிறப்புற எடுத்துரைப்பதாகச் சங்க இலக்கியங்கள் காணப்படுகின்றன. அத்தகைய சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் ஐவகைத் திணைகளின் ஒழுக்கங்களை அழகுற எடுத்துக் கூறுவதாகும். அன்பின் ஐந்திணை என்று தொல்காப்பியர் கூறுவதோடு முதல், கரு, உரிப்பொருள் என்று முப்பொருள்கள் வழி சங்க மக்களின் வாழ்க்கையானது சிறப்புடன் நடைபெற்றது. அக இலக்கியங்களில் சொல்லப்பட்ட தலைவன், தலைவி இருவரும் தங்களது ஒழுக்கங்களில் ஒரு நாகரீகத்தைப் பின்பற்றி வாழ்ந்தனர். அவற்றில் ஒன்றுதான் உள்ளுறை இறைச்சிப் பொருள், கருப்பொருளின் வழி இறைச்சியானது ஆண்மகனின் ஒழுகலாறுகளை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. சங்க அகஇலக்கியங்களில் இறைச்சி இடம்பெற்றுள்ளதைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

**கலைச் சொற்கள்:** இறைச்சி, உள்ளுறை, கருப்பொருள், உரிப்பொருள், விலங்கு, பறவை.

**முன்னுரை**

சங்ககால மக்கள் சிறந்த வாழ்வு வாழ்ந்ததனை இலக்கண இலக்கியங்கள் வழி தெளிவாகின்றது. சங்ககால மக்களின் வாழ்வானது ஒரு வரைமுறை படுத்தப்பட்டதாகவே அமைந்துள்ளது. அகம், புறம் என்ற இரண்டு வாழ்விலும் ஒரு அழகான நாகரீகத்தைப் பின்பற்றியே வாழ்ந்துள்ளனர். தங்களது உள்ளக் கருத்தினை வெளிப்படுத்த பல உத்திகளைக் கையாண்டுள்ளனர். அவற்றில் ஒன்று தான் உள்ளுறை இறைச்சிப் பொருள் மனிதரல்லாது பிற உயிரினங்கள் மீது ஏற்றிச் சொல்லப்படுவதாகும்.

உள்ளுறை உவமத்தைவிட நுட்பமாக உணர்த்தப் பெறுவது இறைச்சிப் பொருள். இதுவும் சங்க அகப்பாடல்களில் பயின்று வருகின்றது. இறைச்சி என்பது கவிஞர்கள் தாம் கூறும் சொற்கட்கு அடைமொழியாகக் கூறப்பெறும் சொற்கள் வறிய அடைமொழியாக மட்டும் நில்லாமல், தமது ஆற்றலாலேயே பிறிதொரு பொருளைக் குறிப்பாகப் புலப்படுத்துமாறு சொல் திறம் தேர்ந்து அமைத்துக் கொள்ளப்பெறும் ஒரு சிறந்த முறையாகும். உள்ளுறையும் இறைச்சியும் அகப்பொருள் நுதலும் தமிழ் இலக்கியங்கட்கே இயன்றதொரு புலனெறி வழக்கமாகும் என்பது ஈண்டு நினைவு

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.27

கொள்ளப்பட வேண்டும்.

**தமிழில் உள்ளுறை எனும் சொல்**

சங்க காலம் முதல் இலக்கியத்தில் சொல்லாடல்கள் பல்வேறு நிலைகளில் நவீன காலகட்டத்திற்கு ஏற்ப பயின்று வருகின்றன. அவ்வகையில் உள்ளுறை என்னும் சொல் தமிழில் தற்போது இருபொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. ஒன்று ஒரு நூல் தன்னகத்தே கொண்டு இருக்கும் உட் செய்திகளை உள் தலைப்பினை தலைப்பு வாரியாக நூலின் முதல் அல்லது முகப்பு பக்கத்தில் பட்டியலிட்டுக் கூறுவதாகும். மற்றொன்று தான் கருதும் கருத்தினை நேரே கூறாமல் ஏதேனும் ஒரு பொருளின் மீது பொதிந்துவைத்து பிறருக்கு குறிப்பாக உணர்த்துதலைக் குறிக்கும். இவ்விரண்டில் முன் கூறிய பொருளைவிட பின் கூறிய பொருளே இலக்கியத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகின்றது.

**தொல்காப்பியமும் குறிப்புப் பொருளும்**

உள்ளுறையை இனம் காண அறியும் வகையில் குறிப்புப்பொருள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. குறிப்புப் பொருள் குறித்து தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், கற்பியல் பொருளியல், உவமவியல், ஆகிய இயல்களில் நூற்பாக்களை யாத்துள்ளார். உள்ளுறை குறித்து தொல்காப்பிய அகத்திணையியலில் நான்கு நூற்பாக்களும், பொருளியலில் ஐந்து நூற்பாக்களும், உவமவியலில் உவமப்போலி குறித்துப் பதினொரு நூற்பாக்கள் என இருபது நூற்பாக்கள் உள்ளுறை பற்றி தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

**இலக்கியத்தில் உள்ளுறை இடம்பெறக் காரணம்**

உள்ளுறை என்பது அக இலக்கியத்திற்கு மட்டமே உரிய ஒன்றாகும். ‘வெளிப்படையாக மொழிதல் என்பது அகப்பொருண்மை பற்றிய சூழலில் எப்பொழுதும் எளிதானதன்று. ஆகையால் குறிப்பாகப் புலப்படுத்தலும் மறைந்து மொழிதலும், வாய்ப்பாகி உள்ளுறைக்கு இடமளிக்கின்றன என்பது ச.வே. சுப்பிரமணியன் கருத்து. இலக்கியத்தில் உள்ளுறை இடம்பெற்ற காரணத்தைத் தௌ;ளிதின் விளக்குகிறது. இருப்பினும் இவ் உள்ளுறை எனும் கோட்பாடு சங்க இலக்கியத்தில் மட்டுமே மிகுதியும் பயன்படுத்தப்பட்டுள்ளமையும், பின்னர் வந்த இலக்கியங்களில் அருகியே காணப்பட்டமையும் நோக்கத்தக்கதாகும்.

**உள்ளுறைக்கான நிலைக்களன்**

உள்ளுறை என்பது சங்க அகப்பாடலுக்கே உரிமைப்படுத்தின தமிழ் இலக்கண நூலார்,

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07042026.27

அகப்பாடலில் உள்ளுறையைப் புலவன் அமைக்க வேண்டுமானால் அதற்கு நிலைக்களம் என்ன என்பதையும் கூறினர் தொல்காப்பியர்,

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்
கொள்ளும் என்ப குறியுணர்ந்தோரே"[1]

என்று கூறினார். எனவே உள்ளுறை என்பது, குறிஞ்சி முதலிய அகத்திணைப் பாக்களில் அமைக்கப்படும் போது அவ் அகத்திணைகளின் தெய்வம் ஒழிந்த கருப்பொருளை நிலைக்களனாகக் கொண்டே அமைக்கப்பட வேண்டும் என்பதை அறியலாம்.

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"[2]

என்று உள்ளுறை அமைய வேண்டிய கருப்பொருளை பதிநான்கினையும் தொல்காப்பியர் பட்டியலிடுகிறார் என்பதை அறியலாம்.

**உள்ளுறை உவமையின் - பொது இலக்கணம்**

உட்கருத்து ஒன்றை உள்ளே வைத்து, வெளிப்படச் சொன்ன உவமை, அவ்வுட்பொருளுடன் ஒத்து முடியும்படி, தான் சொல்வது, அமைய வேண்டுமென, அதற்கேற்றவாறு உள்ளுறுத்தி முடிக்கப் படுவதே உள்ளுறை உவமையாகும். இதனை,

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்"[3]

என்ற இந்நூற்பா மூலம் உள்ளுறைக்கு தொல்காப்பியர் பொது இலக்கணமாக தகுவதை அறியலாம்.

"உவமேயமாய பொருளைத் தன்னுள் அடக்கி நிற்றலின் 'உள்ளுறை' உள்ளுறை உவமமெனப்பட்டது. கூறுவோன்தான் கருதிய பொருள் விரிந்தவிடத்து அஃது ஏனையுவமம் போல விளங்கி நிற்றலின் அவ்வுள்ளுறையைத் தரும் சொற்றொடரை உவமப்போலி என வழங்குவர்."[4]

**இறைச்சிப் பொருள்**

இறைச்சிப் பொருள் என்பது இன்பமே நுதலி வருகின்ற அகப்பொருட் பனுவல்கள் பெரிதும்

குறிப்புப்பொருள் மிக்கனவாகவே இருத்தல் வேண்டும் என்பது பண்டையோர் கொண்ட கொள்கையாகும். காதல் வாழ்க்கையே குறிப்பினால் ஆக்கப்பெறும் இயல்புடையது என்பதை அறிவோம். காதலர் ஒருவரோடொருவர் சொல்லாடுங்கால் அம்மொழிகள் தமது வெளிப்படைப் பொருளால் அவ்விருவரும் பகையுடையோர் போன்று காட்டி நிற்க, அவற்றினின்றும் குறிப்பாகப் புலனாகும் பொருளோ அவர்தம் ஆழ்ந்த காதலை உணர்த்துவனவாக இருக்கும்.

இவ்வாறு பயின்றுவரும் மொழிகள் உரைநடையில் அமையினும் அவை பயில்வோர்க்குப் பேரின்பம் தருவனவாக இருக்குமாயின் இவை உணருந்தோறும் இன்பம் நல்கும் கவிதை மொழியில் அமைந்து விட்டாலோ சொல்ல வேண்டியதில்லை. வானமிழ்தம் உண்டலால் பெறும் இன்பத்தினும் நனிச் சிறந்து திகழும். இக்குறிப்புப் பொருளை அகப்பொருள் நூல்களில் நிரம்பப் பொதியும் பொருட்டே அவற்றிற்கெனச் சிறப்பாகச் சில விதிகளையும் வகுத்தனர். பண்டைத் தமிழ்ச் சான்றோர் இவை உள்ளுறை உவமம் இறைச்சிப் பொருளுமாகும். கவிதை இன்பம் துய்ப்பார்க்கு உள்ளுறை உவமம் சிறந்த விருந்தாக இருக்கும் என்பதையும் அவை சங்க அகப்பாடல்களில் அதிகமாகப் பயின்று வரும் என்பதனையும் கூறியுள்ளனர்.

புலவன் தான் சொல்லுகின்ற உவமத்தோடு ஒத்துக் கூறக் கருதியப் பொருளை வந்து முடியுமாறு அமைந்திருப்பது உள்ளுறை உவமம். புலவன் தான் கூறிய செய்யுளின் பொருளுக்குப் புறத்தே தோன்றுவது இறைச்சி, இவை இரண்டிற்கும் உள்ள வேறுபாடாகும்.

“தொல்காப்பியர் இறைச்சியை உடனுறை என்றும் குறிப்பர். இலக்கணத்தின் ஆழ்ந்த நிலை கண்டு உயர்ந்த பன்மொழிப் புலவர் உயர்திரு. வே. வேங்கடராஜுலி ரெட்டியார் அவர்கள் ‘இறு’, ‘தங்கு’ என்பதன் அடியிற் பிறந்த பெயர் இறைச்சி என்று கூறியுள்ளார்கள். எனவே ‘இறைச்சி’ என்பதும் ‘உடனுறை’ என்பது ஒரு பொருளைக் குறிக்கும் சொற்கள் என்பதனை நாம் அறிதல் வேண்டும்.”[5]

**இறைச்சிப்பொருள் விளக்கம்**

இறைச்சிப்பொருள் இன்னதென்பதை காட்டும் ஒரு சான்று குறுந்தொகைப் பாடலொன்றில்,

“துறுக லயலது மாணை மாக்கொடி

துஞ்சுகளி றிவருங் குன்ற நாட

னெஞ்சுகள னாக நீயலேன் யரனென

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.27

நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்

றவா வஞ்சின முரைத்தது

நோயோ தோழி நின்வயி னானே"[6]

மலையின் பக்கத்துப் படர்ந்த மாணைக்கொடி தங்கிய யானையிடத்துப் படர்வதுபோலுங் குன்றஞ்சூழ்ந்த நாடன் என்றதனால் வரைதற்கு வேண்டிய பொருள் கொணர்ந்து வரைந்து கொண்டு சேர்ந்திருக்கப் பிரிந்தப் பிரிவும் மறந்து கைவிட்டுப் பிரித்தாற் போன்று நினக்குத் துயர் தந்தது. உண்மையை அறிய முடியாமையால் என்ற பொருளில் அமையும் ஐங்குறுநூற்றுப் பாடலொன்றில்,

"அன்னாய் வாழி! வேண் டன்னை என்னை

தானு மலைந்தான் எமக்குத் தழையாயின

பொன்வீ மணியரும் பினவே

என்ன மரங்கொல்? அவர் சார லவ்வே"[7]

தலைவியானவள் நொதுமலர் வரைவு கண்டு தோழி செவிலிக்கு அறத்தோடு நிற்றலை தோழி அந்த நம்பியின் மலைச்சாரலிலுள்ள மரங்கள் என்ன மரங்களாக இருக்குமோ? யான் அவற்றை இன்னவையென அறியக் கூடவில்லை. அவற்றின் தளிரையும் மலரையும் தானும் சூடிக் கொண்டுள்ளான். அவை நமக்கும் தலையாடையாகி அழகு தருவதைப் பார்த்தனையோ இம்மலர்களை நோக்குக தோழி. இங்ஙனம் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்குங்கால் செவிலியிடம் சூழ்ச்சி பிறந்து அவள் தோழியை வினவுவாள். வினவவே தோழி பின்னும் விளக்கமாக அதனைச் செவிலிக்கு உணர்த்துவாள். இங்ஙனம் தலைவியின் பேச்சால் உணரப்படும் குறிப்புப்பொருள் இறைச்சியாகும்.

**தொல்காப்பியம்**

தொல்காப்பியர் கருப்பொருள்கள் இறைச்சியிலும் இடம்பெறும் என்கிறார். இறைச்சி விலங்கு, பறவை ஆகிய இயங்கு திணைகளைக் கருப்பொருள்களாக மட்டும் இடமாகக் கொண்டு பிறக்கும் என்பதும் இவற்றிற்கிடையேயுள்ள அடிப்படையான வேறுபாடாகும். இந்த அடிப்படை வேறுபாட்டை உணர்ந்து கொண்டால் உள்ளுறை இறைச்சிகளுக்கிடையே உள்ள வேறுபாட்டை

உணர முடியாது என ச.பாலசுந்தரம் ‘தொல்காப்பியம் சொல்லதிகார ஆராய்ச்சிக் காண்டிகையுரை’ யில் குறிப்பிட்டுள்ளார். இதனை,

“எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்

அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்

வந்த நிலத்தின் பயத்த ஆகும்”[8]

மேலும் வந்தது கொண்டு வாராதது முடித்தல்'என்ற மரபியல் நூற்பாவில் சிறுபான்மை ஏனையவும் வந்தவழிக் கண்டுகொள்ள முடிகிறது. இவ்வாறு வருதல் திணை மயக்கமாகும். விலங்கு, பறவை ஆகியவற்றின் பொதுப்பெயர் என்பதே தொல்காப்பியர் கொண்ட பொருளாகும். எனவே இச்சொற்பொருளே இறைச்சி என்ற கோட்பாட்டை நன்கு புரிந்து கொள்ள உதவும் என்பது உறுதியாகும்.

“இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்

இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா

நிலத்துவழி மருங்கில் தோன்றலான”[9]

என்ற நூற்பாவழி அறிந்துகொள்ள முடிகிறது.

“இறைச்சி தானே பொருள்புறுத் ததுவே”[10]

இறைச்சிப் பொருள் என்பது உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருளாகும். கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவதாகும். இதனைக் குறுந்தொகையில் “நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று என்ற பாடல்வழி நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப் பூவுந் தேனும் இறைச்சிப் பொருளாகும்.

“இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே

திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே”[11]

இறைச்சிப்பொருள் பிறிதொரு பொருள்கொளக் கிளப்பனவுங் கிளவாதனவுமென இருவகைப்படும். அவற்றிற் பிறிதொரு பொருள்பட தோன்றும் பாடல்,

“ஒன்றேன் அல்லேன் ஒன்றுவென் குன்றத்து

பொருகளிறு நிதித்த நெரிதாள் வேங்கை

குறவர் மகளிர் கூந்தர் பெய்ம்மார்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.27

நின்றுகொய மலரும் நாடனொடு

ஒன்றேன் தோழி ஒன்ற னானே”[12]

போர் செய் களிற்றால் மிதிக்கப்பட்ட வேங்கை மரம் நெரிந்து பூமியில் தாழ்ந்து குறமகளிர் நின்றபடியே மலர் கொய்யும்படியாக விளங்கும் என் தலைவி சுட்டுவது ஓர் உட்கிடையை வெளிப்படுத்தும் வேற்றுவரைவால் மனம் கலங்கிய யானும் தலைவன் வரின் அவனோடு சென்று வாழ்தற்கும் ஒருப்பட உள்ளேன் என்பதைக் குறிக்கின்றாள். இக்கூற்றுகள் இறைச்சிப் பொருளாகும். தொல்காப்பிய நூற்பாவழி கலித்தொகைப் பாடலொன்றில் அன்புறுதற்குத் தகுவன இறைச்சிப் பொருட்கண் சுட்டுதலும் வற்புறுத்தலாம் என்றவாறு,

“அடிதாங்கும் அளவுஇன்றி அழல் அன்ன வெம்மையால்

கடியவே கனங்குழாஅய் காருடன்றார் அக்காட்டுள்

துடியடிக் கயத்தலை கலக்கிய சின்னீரைப்

பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிரெனவும் உரைத்தனரே”[13]

பொன்னாற் செய்த கனவிய குழையை உடையவளே! காடுகள் நெருப்புப் போன்ற வெம்மையினால் பாதங்கள் பொறுக்கும் அளவின்றிக் கடியவாக இருக்கும் என்று சொன்னார். சொல்லிய அக்காட்டிடத்தே துடிபோன்ற அடியினை உடைய யானைக் கன்று தாயும் தந்தையும் உண்ண வேண்டும் என்று கருதாது கலக்கிய சிறிதளவாகிய நீரைக் கவிறு முதற்கண் பிடி உண்ணுமாறு ஊட்டிப் பின்னத் தான் உண்ணும் என்றதால் இறைச்சிப் பொருளாகும்.

**வீரசோழியம்**

புத்தமித்திரர் இயற்றிய ஐந்திலக்கண நூலாகிய வீர சோழியத்தில்,

“அகப்பொருளை அறிந்து கொள்ள உதவும் இருபத்தேழு பொருள்களுள் ஒன்று இறைச்சிப் பொருள் என்பது குறிக்கப் பெற்றுள்ளத”[14]

இங்கு இறைச்சிப்பொருள் என்பது இறைச்சிக் கோட்பாட்டைக் குறிக்காது கருப்பொருள் என்பதையே குறிக்கிறது. இது கருப்பொருள் மூலம் பின்பற்றப்படும் உத்தியாகும்.

**நம்பியகப்பொருள்**

இறை - தங்குதல், கருப்பொருளை அடிப்படையாய்க் கொண்டு ஆராய்ச்சியால் ஒப்பிட்டுக் காணும் உள்ளுறைக்கு மேலாக வேறோர் பொருள் புலப்படுமாறு அமைவது இறைச்சியாகும்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07042026.27

"கருப்பொருள் பிறக்கும் இறைச்சிப் பொருள்"[15]

முதல், கரு, உரி என்னும் மூவகைப் பொருள்களுள் கருப்பொருள்களை இடமாகக் கொண்டு தோற்றம் பெறுவது இறைச்சியாகும். உவமையாகக் கூறப்பட்ட பொருளும் உய்த்துணர்கின்ற பொருளும் ஒத்து முடிவது உள்ளுறை. அதனின்று மற்றொரு பொருள் புலப்படுதல் இறைச்சி என்கிறது. இறைச்சிப் பொருள் கருப்பொருளின் கண்ணே பிறக்கும் என்கிறார் நாற்கவிராச நம்பி.

**மாறனலங்காரம்**

மாறனலங்கார உரையாசிரியர் திருக்குருகைப் பெருமாள் இறைச்சி என்ற சொல்லிற்கு கருப்பொருள் எனப் பொருள் கொண்டதையும் தொல்காப்பிய நூற்பாவழி இறைச்சிக் கோட்பாட்டை விளக்குகிறார்.

"கருப்பொருள் களனாங் கட்டுரை பயின்ற

பொருட்புறத் தனவா இறைச்சிப் பொருளணி"[16]

இறைச்சியை ஓர் அணியாகவே கருதியுள்ளார். இறைச்சியைக் கருப்பொருள் எனக் கூறுவதைவிட இயங்குதிணைக் கருப்பொருளாகக் கொண்டு உரிப்புறத்து வருவதே தொல்காப்பியர் கருத்தாகும். இறைச்சி என்பது அகப்பொருளுக்குரிய மரபாகவே மாறனலங்காரம் போற்றுகின்றது.

இறைச்சிப்பொருளும் உடனுறையும் ஒன்றென்பர். ஆனால் அவை இரண்டும் வேறானவை என்பதனை,

"உரையாசிரியர்களும், திறனாய்வாளர்களும் உடனுறையும் இறைச்சியும் ஒன்றே எனத் தவறாகக் கணித்து விட்டனர்"[17]

என்று க.வெள்ளைவாரணன் கூறுகிறார்.

**யாப்பருங்கலக்காரிகை**

இறைச்சியின் குறிப்புப் பொருள் தோன்றும் என்பதை,

"பொருளோ சொல்லே யாண்டப் பொருட்குத்

தன்னையோ பொருளையோ யுட்படுத்தி நின்றே

அதனை யுணர்ந்து மாக்காவிய விசேடமே

தொனியெனக் கூறுப தொல்பெரும் புலவர்"[18]

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s) 

வாச்சியம் என்ற வெளிப்படைப் பொருளின்வழி வியங்கியம் என்ற குறிப்புப் பொருள் தோன்றும் என்ற தொனிக் கோட்பாடு இதனால் இறைச்சிக் கோட்பாட்டுடன் ஒத்திசைய அமைந்துள்ளமை புலப்படும்.

தொல்காப்பியர் உணர்ச்சியாகிய சுவை குறிப்புப் பொருளுக்குத் தேவையானது என்பதை இறைச்சிக் கோட்பாட்டில் குறித்துள்ளார். ஆனந்தவர்த்தனரும் தொனிக்கோட்பாட்டில் அதற்குரிய இடத்தை,

“பல்வகை வாச்சியமும்வா சகமும்

அவற்றை யழகுறச் செய்கரு விகளும்

சுவையை நோக்கி யதங்கங் கமாக

நிற்கு மிடனன்றோ தொனிக்கிடனாகும்”[19]

எனச் சுவையின் இடத்தைத் தொனிக் கோட்பாட்டில் வற்புறுத்தியுள்ளார். களவில் ஒழுகி வரும் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிக்கின்றான். தாம் அவன் விருப்பப்படி செய்த நன்றியை மறவாது விரைவில் வரைந்து கொள்ளுமாறு வேண்டுகின்றாள் தோழி. இதனை,

“கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்

தினைபிடி உண்ணும் பெருங்கல் நாட”[20]

என்னும் குறுந்தொகைப் பாடலில் தோழி உணர்த்திய வெளிப்படைப் பொருள் கன்று தன் முலையை மாத்திக் கொண்டேயிருப்பத் தன் பசியைப் போக்குவதற்கும் அக்கன்றுக்குரிய பாலைப் பெறுவதற்கும் பிடி தினையை உண்கின்றது. அத்தகைய பிடிகள் நிறைந்த நாட்டின் தலைவன் என்பதும் நீயும் நாங்கள் உன் வரவினை எதிர்நோக்கி மகிழ்ந்திருக்குங்கால் தலைவியை வரைவதையும் ஒருங்கே செய்வித்தற்குக் கருவியாகிய பொருளை ஈட்டி வருவதற்குரிய என்பதும் இறைச்சிப்பொருள் ஆகும்.

இதேபோன்று மாணிக்கவாசகரின் திருக்கோவையாரில் களவொழுக்கம் ஒழுகா நின்ற தலைமகன் கழுநீர் மலரைக் கையுறையாகக் கொண்டு சென்று அதனை ஏற்றுக்கொள்ளுமாறு தோழியை வேண்டுகின்றான். அவள் ஒரு காரணம் கூறி கையுறையை மறுக்கின்றாள். இதனை,

“நறமனை வேங்கைமின் பணுப்பாயில்

பாறையை நாகநண்ணி

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.27

மறமனை வேங்கையென நனியஞ்சு

மஞ்சார் சிலம்பா

கிறமனை வேங்கைச் சுணங்கொடு

அணங்கு அலர் கூட்டுபவோ

நிறமனை வேங்கை அதம்

பலவன் நெடுவரையே”[21]

இந்தப் பாடலில் வேங்கை மலர்களால் மூடப்பெற்றுள்ள கற்பாறையைக் கண்ட யானை அதனைப் புலியென அஞ்சும் நாடன் எனத் தலைவனுக்கு அமைந்த அடைமொழி இறைச்சிப்பொருள்பட வந்தது.

**முடிவுரை**

இலக்கியத்தில் எழுத்துச்சுவை, சொல்சுவை, பொருள்சுவை, அணிச்சுவை, யாப்புச்சுவை, பல்வேறு சுவைகளுடன் இலக்கியத்தில் உத்தி முறைகள் கையாளப்படுகின்றன. அதனையொட்டியே உள்ளுறை இறைச்சி என்ற இரு உத்தி குறித்து இருபத்தாறு நூற்பாக்களைத் தொல்காப்பியர் கொடுத்துள்ளார். தொல்காப்பியர் குறிப்பு பொருளை இலக்கியச்சுவை மெருகூட்டும் உத்தி என உரைப்பதை இதன் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. சங்க இலக்கியத்தில் உள்ளுறை இறைச்சி கொண்ட பாடல்கள் சிறந்து விளங்குவது அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்.பொருள்.அகத். நூ. 18
2. மேலது., நூ. 18
3. மேலது., நூ. 48
4. தொல்.பொருள்.அகத்.நூ. 113
5. என். சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப. 232
6. குறுந். பா. 36:1-5
7. ஐங். பா. 201
8. தொல்.பொருள்.அகத். நூ. 21
9. தொல்.பொருள்.பெயரியல், நூ. 681
10. தொல்.பொருள்.பெயரியல், நூ. 225
11. தொல்.பொருள்.பெயரியல், நூ. 226
12. குறுந். பா. 208

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.27

13. கலித். பா. 11:6-10
14. பெருந்தேவனார் உரை, வீரசோழியம், ப. 90
15. நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், நூ. 240
16. இருக்குருகைப் பெரமாள் கவிராயர், மாறனலங்காரம், நூ. 176
17. க. வெள்ளைவாரணன், தொல்காப்பிய உரைவளம், பொருளதிகாரம், ப. 48
18. ந.மு. வேங்கடசாமி நாட்டார், யாப்பரங்கலக்காரிகை. சூத். 13
19. ந.மு. வேங்கடசாமி நாட்டார், யாப்பருங்கலக்காரிகை. சூத். 26
20. குறுந். பா. 225:1-2
21. மாணிக்கவாசகர், திருக்கோவையார், பா. 96

**துணை நூற்பட்டியல்**

[1.] என். சுப்பரெட்டியார், அகத்திணை கொள்கைகள் தொகுதி - 2, அய்யனார் பதிப்பகம், சென்னை, 2011.

[2.] உ.வே. சாமிநாதையர், குறுந்தொகை, கபீர் அச்சுக்கூடம், சென்னை, முதற்பதிப்பு-1937.

[3.] ஓரம்போகியார் - அம்மூவனார், ஐங்குறுநூறு மருதமும் நெய்தலும் மூலமும் உரையும், ஜீவா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-2013.

[4.] கா.ரா. கோவிந்தராச முதலியார், வீரசோழியம், கழக வெளியீடு, சென்னை, 1970.

[5.] த.வ. இராமசுப்பிரமணியன், தொல்காப்பியம் - பொருளதிகாரம், பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-2008.

[6.] திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறன் அலங்காரம், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1929.

[7.] அ.மா. பரிமணம், பாலசுப்பிரமணியன் கு.வெ., கலித்தொகை மூலமும் உரையும், நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.

[8.] அ.மா. பரிமணம், கு.வெ. பாலசுப்பிரமணியன், அகநானூறு மூலமும் உரையும், நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.

[9.] நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், கா.ரா. கோவிந்தராச முதலியார், கழக வெளியீடு, சென்னை-18, 15ஆம் பதிப்பு-2002.

[10.] மு. வேங்கடசாமி நாட்டார், யாப்பருங்கலக்காரிகை, சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை - 108.

**[11.]** மாணிக்கவாசகர், திருக்கோவையார், கழக வெளியீடு, சென்னை, 1998.

tamilmanam